# மூத்தக்குடிமக்கள் காவல்துறையின் முதன்மை குடிமக்கள்

இந்திய திருநாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில் காவல்துறையையும் காவல் அதிகாரிகளையும் மக்கள் அதீத நம்பிக்கையுடன் சார்ந்துள்ளனர். காவல்துறையினர் பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைக்கு பாதுகாப்பு அளிப்பதோடு, அனைத்து மக்களின் சுதந்திரத்தை பாதுகாப்பதும் கடமையாகக் கொண்டுள்ளனர்.

கடமை உணர்வோடு மக்களின் எதிர்பார்ப்புக்கு ஈடு செய்யயும் அளவில் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பணி செய்வது அவசியம். அதற்கென, அவ்வப்போது புதிதாக இயற்றப்படக்கூடிய சட்டங்களை அமல்படுத்துவதிலும் அடிப்படை சட்டங்களை கடைபிடிப்பதிலும் இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு உட்பட்டு காவல்துறை செயல்படுகின்றது.

காவல்துறையின் பணி, அந்த பகுதியில் நடக்கக்கூடிய குற்றங்களைத் தடுப்பதும், மீறி நடந்தால் எத்தனை குற்றங்கள் பதியப் படுகின்றன? அவை எம்மாதிரியான குற்றங்கள்? என அறிந்து அவற்றிற்கான உரிய நடவடிக்கை எடுப்பதும் என்பது தெரிந்ததே. இப்பணியைக் காவல்துறை செய்வதைப் பொறுத்து அதன் மதீப்பீடும், செயல்பாட்டுத்திறனும் கணிக்கப்படுகின்றன. பொது பாதுகாப்போடு, சிறுவர் சிறுமியர்கள், குழந்தைகள், பெண்கள், வயது முதிர்ந்தோர், சமூகத்தால் பல்வேறு விதமான இன்னல் களுக்கு உட்படுத்தப்பட்டு தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கும் மக்கள் என சிறப்பு கவனம் செலுத்த வேண்டிய பிரிவுகளும் காவல்துறை கவனத்தில் உள்ளன.

பொதுமக்கள் கண்ணோட்டத்தில் உண்மையான பாதுகாப்பு என்பது, எந்த அளவுக்கு காவல்துறை மூலம் அவர்களுக்கு “பாதுகாப்பு உணர்வை”கொடுக்கின்றோம் என்பதை பொறுத்து அவர்கள் காவல் துறையின் செயல்பாட்டை மதிப்பீடு செய்கின்றார்கள்.



வே.பாலகிருஷ்ணன், இ.கா.ப

ஒரு மாதத்தில் நடந்த குற்றங்களின் எண்ணிக்கை, கண்டுபிடித்த குற்றங் களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கணக்கில் வைத்து ஒரு காவல் நிலையத்தின் காவல் அதிகாரியின் செயல்பாடு தீர்மானிக்கப்படுகிறது. ஒரு காவல்நிலையத்தில் எடுத்துக் காட்டாக, குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே வழக்குகள் பதிவு செய்யப்படும்



www.kavalarvoice.in



நிலை இருந்தால் காவல்துறை கண்ணோட்டத்தில் அந்தக் காவல் நிலையம் மிக அமைதியாக இருகின்றது.

என்றும் அங்கு எந்தவித பிரச்சனையும் இல்லை என்றும் பொருள். அதே நேரம் மக்கள் கோணத்தில் பார்க்கும்போது வழக்குகள் பதிவாகும் அளவு கோலைவிட அவர்கள் எந்த அளவுக்கு பாதுகாப்பாக உணர்கிறார்கள் என்பதுதான் முக்கியம். பாதுகாப்புக்கும், பாதுகாப்பு உணர்வுக்கும் வேறுபாடு இருக்கின்றது. எவ்வளவுதான் காவல்துறை பாதுகாப்பு கொடுத்தாலும், வழக்குகளே பதிவு செய்யப்படாத நிலை இருந்தாலும், அந்தக் காவல் நிலைய சரகத்துக்குட்பட்ட மக்கள் பாதுகாப்பு உணர்வைப் பெறவில்லை என்றால் எத்தனை சட்டங்கள் இருந்தாலும், எத்தனை காவலர்கள் இருந்தாலும் அதில் எந்தவித பொருளும் இல்லாமல் போய்விடுகின்றது.

ஆகவே, மக்கள் கருத்தை (feed–back) காவல்துறை தொடர்ந்து கேட்பதன் மூலம் மக்கள் அவர்களின் பாதுகாப்பைப்பற்றி என்ன நினைக்கின்றார்கள் என்ற மக்களின் நாடித்துடிப்பை உணர முடியும். ஆகவே, மக்கள் இரவு பகல் 24 மணி நேரமும் பாதுகாப்பு உணர்வோடு தங்களுடைய பணிகளை செவ்வனவே செய்ய முடிகின்றதா? இந்திய அரசயலமைப்புச் சட்டத்தில் கொடுக்கப் பட்டிருக்கின்ற உரிமைகளை அவர்கள் அனுபவிக்க



www.kavalarvoice.in




2007-ல் அமலுக்கு வந்த முதியோர் பாதுகாப்புச் சட்டம் முதியோர்களுக்கு பல்வேறு பாதுகாப்புகளை அளிக்கின்றது. பொருளாதார ரீதியாகவும், பாதுகாப்பு கோணத்திலும் அரசு என்னென்ன செய்ய வேண்டும் என்பதை இந்த சட்டம் தெளிவாக சொல்கின்றது. ஒருபக்கம் இந்தச் சட்டம் பற்றிய விழிப்புணர்வு குறைவாக இருப்பதும், இன்னொரு பக்கம் அதன் செயல்பாடுகளில் ஒரு சில நடைமுறை சிரமங்கள் இருப்பதாலும் முதியோர்கள் இந்த சட்டத்தை பயன்படுத்துவது குறைவாக உள்ளது.

முடிகின்றதா என்ற கண்ணோட்டத்தில் பார்த்து அவர்களுடைய எதிர்பார்ப்புக்கும் காவல்துறையின் செயல்பாட்டிற்கும் இடைப்பட்ட இடைவெளியை ஒழிப்பது காவல்துறையின் கடமை.

அதிலும் குறிப்பாக பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன மக்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், திருநம்பிகள் இவர்களெல்லாம் காலங்காலமாக வரலாற்று காரணங் களுக்காகவோ, கலாச்சார அடிப்படை யிலோ ஒரு சாதாரண நபரைவிட அதிகமாக பயமுள்ள சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களைப் பேணுவதோடு வறியவர்கள், எளியவர்கள் மற்றும் சமுதாயத்தில் விளிம்பு நிலையில் உள்ள மக்களையும், அவர்கள் சார்ந்துள்ள சமுதாயத்தையும் காப்பாற்றுவது காவல்துறையின் தலையாய கடமை.

இதுபோல பாதிப்பிற்கு உள்ளாகும் நிலை வகைப்பாட்டில் உள்ள ஒரு வகையினர் தான் மூத்த குடிமக்கள். மூத்த குடிமக்களை பேண வேண்டியது ஒரு சமுதாயத்தினுடைய கடமை. சமுதாயம் எனும் போது சமுதாயத்தின் பாதுகாவலர்களாகிய காவல்துறை அந்த பணியை செய்வது முக்கியம்.

இன்று உலகளவில் ஜனத் தொகை பெருக்கம் 0.87% அளவுக்கு குறுகி விட்டதாலும், சமூக பொருளாதார மற்றும் கலாச்சார சூழல் காரணமாக பல நாடுகளில் தம்பதியினர் குழந்தை பெறுவதற்கு தயங்குவதாலும் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுடைய எண்ணிக்கை குறைந்து வருகின்றது. உலகளவில் எல்லா நாடுகளிலும் சமுதாயங்கள் வயதாகிக் கொண்டே வருகின்றன, அதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல. தற்போதைய சூழலில் இந்தியாவின் மக்கள் தொகை பெரும் பாலும் இளைஞர்களை உள்ளடக்கியதாக இருந்தாலும் ஒரு இந்தியக் குடிமகனின் சராசரி வாழ்நாள் காலம் (Life Expectancy) சுதந்திரம் அடைந்த நேரத்தில் 32 இல் இருந்து இன்று 70 வருடங்களாக மாறி உள்ளதால் மூத்தகுடி மக்கள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

மூத்தக் குடிமக்கள் என்ற வகைப் பாடு, இந்தியர்களின் ஆயுட்காலம் தேசிய அளவில் 3.2 ஆக இருந்த போது 60 வயது என நிர்ணயிக்கப்பட்டு அதற்கேற்று பணி ஒய்வு வயதும் தீர்மானிக்கப்பட்டது. இன்று ஆயுட் காலம் தேசிய அளவில் சராசரியாக அதிகமாய் இருப்பதால் மூத்த குடிமக்கள் என்ற வகைப்பாடு சிறிது வயதளவில் மேலே சென்றிருக்க வேண்டும். இருப்பினும், அது 60 வயதாகவே இன்று வரை உள்ளது. அறுபது வயதாக இருந்தாலும் 70 வயதானாலும் மூத்தக் குடிமக்கள் என்ற வகைப்பாட்டில் வரும்போது அவர்களை தனியாக சிறப்பு கவனம் செலுத்தி பேணுவது காவல்துறையின் கடமை யாகும். அவர்களுடைய பாதுகாப்பை உறுதி செய்வது காவலர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பணியில் மிக முக்கியமான ஒன்றாகும்.

இந்திய சமூக பொருளாதார மாற்றத்தில் இன்று வெளிநாடுகளில் சென்று வேலை பார்க்க கூடிய இளைஞர் களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டதாலும், கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து சிறு குடும்பங்களாக உருவாகி வருவதாலும் தனியாக வாழக்கூடிய





முதியவர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. அவர்களை கவனிக்கும் வகையில் ஒரு பக்கம் கோவை போன்ற நகரங்களில் முதியோர் இல்லங்கள் (Retirement Homes) தனியாரால் நடத்தப்பட்டு சிறப்பாக பேணப்பட்டு வந்தாலும் இன்னும் கணிசமான எண்ணிக்கையில் வயது முதிர்ந்தோர் தனியாக வாழக்கூடிய நிலையிருக்கின்றது. பெரும்பாலும் அவர்களுடைய குழந்தைகள் வெளி மாநிலங்களிலோ அல்லது வெளி நாடுகளிலோ வாழ்ந்து வருகின்றனர். அவ்வப்போது அவர்கள் வந்து சென்றாலும், அன்றாடம் அவர்களுடைய பாதுகாப்பை உறுதி செய்வது கடினம். அவர்களில் ஒரு சிலர் சிசிடிவி கேமராக்கள் பொருத்தி அதன் பதிவுகளை செல்போன் மூலம் பார்த்து பெற்றோர்களை பாதுகாக்கின்றனர். ஆனால் எந்தவித ஆதரவும் இல்லாத முதியோர்கள் தனியாக இருக்க கூடிய சூழலில் அவர்களை பாதுகாப்பது காவல்துறையினருடைய கடமை.

2007–ல் அமலுக்கு வந்த முதியோர் பாதுகாப்புச் சட்டம் முதியோர்களுக்கு பல்வேறு பாதுகாப்புகளை அளிக்கின்றது. பொருளாதார ரீதியாகவும், பாதுகாப்பு கோணத்திலும் அரசு என்னென்ன செய்ய வேண்டும் என்பதை இந்த சட்டம் தெளிவாக சொல்கின்றது. ஒருபக்கம் இந்தச் சட்டம் பற்றிய விழிப்புணர்வு குறைவாக இருப்பதும், இன்னொரு பக்கம் அதன் செயல்பாடுகளில் ஒரு சில நடைமுறை சிரமங்கள் இருப்பதாலும் முதியோர்கள் இந்த சட்டத்தை பயன்படுத்துவது குறைவாக உள்ளது. இந்த சூழலில் முதியோர்களுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதில் காவல்துறை முனைப்புக் காட்டிவருவது குறிப்பிடத் தகுந்தது.

மேற்கூறிய சட்டத்தில் உள்ள முக்கிய சரத்தான ஒவ்வொரு காவல் நிலையத்திலும் முதியோர் தொடர்பு அதிகாரி (Senior Citizen Liaison Officer) ஒவ்வொரு காவல் நிலையத்திலும் இருக்க வேண்டும். காவலர்கள் அந்த காவல் நிலைய சரகத்தில் வசிக்கக்கூடிய முதியவர்களுக்கும் காவல் நிலையத்திற்கும் இடையே பாலமாக இருப்பார்கள். இது மிக முக்கியமான தேவை. இந்தச் சட்டப்பிரிவின் அடிப்படையில் கோவை மாநகரத்தில் முதியோர் தொடர்பு அதிகாரிகள் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட காவலர்களை கொண்டு நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அது தொடர்பான தேவையான பயிற்சியும் அளிக்கப்பட்டு வயது முதிர்ந்தவர்களை எப்படி கையாள வேண்டும்,எப்படி பேச வேண்டும், என்ன பேச கூடாது, என்ன செய்ய கூடாது என்பவை சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் காவலர்கள், அவர்கள் சரகத்தில் தனியாக இருக்கும் முதியோர் களுடைய பட்டியலை முதலில் தயார் செய்கிறார்கள். முதியோர் பென்ஷன் பெறக்கூடிய அனைவருடைய பட்டியலும்

**முதுமையில் தனிமை என்பது மிகப்பெரிய ஒருபிரச்சனை அவர்களை காவலர்கள் சென்று சந்திக்கும்போது அந்த தனிமைச் சூழல் துண்டிக்கப்படுகின்றது. ஆகவே காவலர்களுடைய வருகையை அவர்கள் எதிர்பார்த்து இருக்கின்றனர்.**

மாவட்ட நிர்வாகத்திடமிருந்து பெறப்பட்டும், காவல் நிலையங்களில் உள்ள Neighbourhood Police Officers மூலம் அந்த பகுதியில் ரோந்து செல்லும்போது தனியாக இருக்கக்கூடிய முதியோர்களின் பட்டியலை அந்த பகுதியில் உள்ள மாமன்ற உறுப்பினர்கள் மூலமாக பெற்றும் அந்த பட்டியல் முதியோர் தொடர்பு அதிகாரி மூலம் புள்ளி விபரமாக தயாரிக்கப்படுகின்றது. பின்பு யார் யாருக்கு காவல்துறை யினுடைய உதவி தொடர்ந்து தேவைப்படுகிறது என்று பட்டியலிட்டு ஒவ்வொரு முதியோருடைய முகவரி, தொலைப்பேசி எண் ஆகியவை காவல் நிலைய பதிவேட்டில் பதிவு செய்தும், இந்த தகவல்களை தமிழகக் காவல் துறையின் “ஸ்மார்ட் காவலன” செயலில் (SMART KAVA-LAN APP) பதிவு செய்தும் அதன் மூலமாக ரோந்து காவலர்கள் ஒவ்வொரு முறை இந்தப் பகுதிக்கு செல்லும் போது தனியாக இருக்கும் முதியோர்களை சென்று நேரில் சந்திப்பதோடு அவர்களின் குறைகளையும் சரி செய்கின்றனர். முதியோர் தொடர்பு அதிகாரியின் தொலைப்பேசி எண் அனைத்து முதியோர்களிடம் கொடுக்கப்பட்டு அவர்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால் உடனடியாக தொடர்பு கொண்டு அவருடைய பிரச்சனைகளை வெளிப்படுத்தி தீர்வு காணக்கூடிய வகையில் இந்த செயல்முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையின் மூலம் மூத்த குடிமக்கள் தொடர்ந்து காவலர்களை தொடர்பு கொள்கிறார்கள். அவர்களு டைய சிறு சிறு பிரச்சனைகள் முதற்கொண்டு, எடுத்துக்காட்டாக ஒரு மருந்து வாங்க வேண்டுமென்றாலும் காவலர்களை அழைத்து உதவி கேட்கின்றார்கள். அதற்கு, காவலர் களும் மனம் கோணாமல் உதவி செய்து வருகின்றனர். சமீப காலங்களில் இணைய வழிக் குற்றங்களில் (Cyber Crime) மூத்தக் குடிமக்கள் போலிக் காவல் அதிகாரிகள், போலி எப்.ஐ.ஆர், போலி காவல் நிலையங்கள் மூலம் கோடிக் கணக்கில் ஏமாற்றப்படு கிறார்கள்.

காவலர்கள் இந்த மாதிரியானக் குற்றங்கள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். அதைப்போல ஏதேனும் சட்ட ரீதியாக உதவிகள் தேவைப்பட்டாலும் அதற்கேற்ற சட்ட ஆலோசனைகளை காவலர்கள் வழங்கு கிறார்கள்; அவர்களுக்கு தெரியாத பட்சத்தில் உரிய நபர்களிடம் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கின்றார்கள். இந்த முதியோர் தொடர்பு அதிகாரிகள் அனைவரும் WhatsApp குழு மூலமாக மூத்தக்குடிமக்கள் நலனுக்காக உழைக்கும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடனும், மாவட்ட சட்டப் பணிகள் குழுவில் உள்ள வழக்கறிஞர் களுடன் தொடர்பில் இருக்கின்றார்கள். இவ்வாறு மூத்தக்குடிக்களுக்கு உதவு வதற்காக A to Z எல்லா உதவிகளையும் செய்து கொடுப்பதில் கோவை மாநகர காவல்துறை முனைப்பாக செயல்படுகின்றனர்.

காவல்துறையின் இந்த செயல்பாடு மூத்தக்குடிமக்கள் மத்தியில் பெரிய வரவேற்பை பெற்றுள்ளதோடு, பெரும் பாலானோர் அந்த காவலர்களை தங்களுடைய மகன்களாக பாவிக்க கூடிய ஒரு உணர்ச்சிபூர்வமான சூழலும் ஏற்பட் டுள்ளது. இந்த முயற்சியின் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக மூத்தக்குடிமக்களுக்கு எதிரான குற்ற வழக்குகள் ‘Almost Zero’ என்ற அளவிற்கு குறைந்துள்ளது.



ஒரு சிலநேரம் காவலர்கள் சென்று மூத்தக்குடிமக்களை சந்தித்து பேசும்போது மனதளவில் அவர்கள் உற்சாகப்படுத்தப் படுகிறார்கள்.

முதுமையில் தனிமை என்பது மிகப்பெரிய ஒருபிரச்சனை அவர்களை காவலர்கள் சென்று சந்திக்கும்போது அந்த தனிமைச் சூழல் துண்டிக்கப்படுகின்றது. ஆகவே காவலர் களுடைய வருகையை அவர்கள் எதிர்பார்த்து இருக்கின்றனர். வளர்ந்துவிட்ட தொழில்நுட்பம் வளர்ச்சி மூலம் எந்த நேரத்திலும் காவலர்களை அழைக்க முடியும் என்ற ஒரு நிலை இருந்தாலும், காவலர்கள் நேரடியாக சென்று மாதம் ஒரு முறை சந்திக்கும் போது அவர்களுக்கு இருக்கக்கூடிய மகிழ்ச்சி அளவிட முடியாதது. காவல்துறை செய்து வருகின்ற இப்பணி மிகவும் திருப்திகரமாகவும் மன நிம்மதி கொடுப்ப தாகவும் இருக்கிறது.